# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| நாடகமும் அரங்கியலும் | தரம் :- 13 (2017) | நேரம் :-மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்குச் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை புள்ளடித்தாளில் குறித்துக்காட்டுக.**

1. ஒரு நாடகம் நடைபெறும் பொழுது அந்நாடகம் பார்வையாளருக்குத் தெரிந்தும் அதே நேரம் நடிக்கும் பாத்திரத்திற்குத் தெரியாமலும் இருக்கும் கதையம்சம்
   1) மோதுகை 2) கண்டறிகை 3) தெரியாநிலை
   4) நாடகமுரண் 5) முறுக்கவிழ் முடிவமைதி

2. ஆற்றுகைக் கலைகள் என்று கருதக்கூடியவற்றுள் பொதுவாக இடம் பெறாதது எது
   1) சிற்பம் 2) இசை 3) நடனம் 4) நாடகம் 5) வில்லுப்பாட்டு

3. ஐரோப்பிய அரங்கிள் தாயகம், தொட்டில் என அழைக்கப்படுவது
   1) கிரேக்கம் 2) உரோம் 3) எகிப்து 4) இங்கிலாந்து 5) பிரான்ஸ்

4. கதாசிஸ் எனக் கிரேக்க மரபில் கூறப்படும் (உணர்ச்சி) வெளிக்கொணர்கயில் இடம் பெறும் உணர்ச்சிகள்
   1) பரிவும் கழிவிரக்கமும் 2) பயமும் வியப்பும் 3) கழிவிரக்கமும் சோகமும்
   4) பரிவும் பயமும் 5) சோகமும், அன்பும்

5. நாட்டிய சாஸ்திரத்தில் பரதரால் குறிப்பிடப்படாத ரசங்கள்
   1) அற்புதமும் பக்தியும் 2) கருணையும், சாந்தமும் 3) சாந்தமும், பக்தியும்
   4) ரௌத்திரமும் வீரமும் 5) லாஸ்யமும் சிருங்காரமும்

6. மேல் நாட்டு நாடக மரபின் ஊற்றுக்காலாகக் கொள்ளப்படுவது
   1) சற்றயர் ஆகும் 2) மகிழ்நெறி ஆகும் 3) டித்திறாம் ஆகும்
   4) அற்புத நாடகம் அகும் 5) பொம்மலாட்டம் ஆகும்

7. அகமென்னன் என்பது
   1) தனியே ஒரு நாடகத்தைக் குறிப்பதாகும்
   2) முத்தொகுதி நாடகத்தை குறிப்பதாகும்
   3) கிரேக்க வரலாற்றுக் கதைகளைக் கறிப்பதாகும்
   4) சோபோகிளிசால் எழுதப் பெற்றதாகும்
   5) மகிழ் நெறிவகை நாடகத்தைச் சார்ந்ததாகும்

8. கொமடியா டெல் ஆர்த்தே எவ்விடத்தில் தோற்றிய வடிவமாகும்
   1) பிரான்சில் 2) கிறீசில் 3) இங்கிலாந்தில் 4) இத்தாலியில் 5) யப்பானில்

9. மொலியே என்பவர்
   1) ஆங்கில நாடக ஆசிரியராவார் 2) யேர்மனிய நாடக ஆசிரியராவார்
   3) பிரெஞ்சு நாடக ஆசிரியராவார் 4) ஸ்பானிய நாடக ஆசிரியராவார்
   5) சுவிஸ் நாடக ஆசிரியராவார்

10. சேக்ஸ்பியரின் நாடகங்கள் பெரும்பாலும் நடைபெறுவது
1) காலையில் 2) பகலில் 3) மாலையில் 4) நள்ளிரவில் 5) விடியற்காலையில்

11. மறைஞான நாடகங்கள் என்பவை
1) துப்பறியும் நாடகங்களை சேர்ந்தவையாகும்
2) அற்புதக் கதைகளைக் கொண்டவையாகும்
3) ஒழுக்கப்பண்புகளை கொண்டவையாகும்
4) யேசுவின் வாழ்க்கை வட்டத்தை கொண்டவையாகும்
5) உலகியல் கதைகளைக் கொண்டவையாகும்

12. ஐரோப்பிய நாடக அரங்கில் முதல் பிரச்சினை நாடகங்களை எழுதியவராகக் கொள்ளப்படுவர்
1) சோபோகிலிஸ் 2) எமிஸிசோலா 3) பிஹெக்ற் 4) இப்சன் 5) பீற்றபுறூக்ஸ்

13. பிரயோக அரங்கு என்பது அரங்கில்
1) கேளிக்கைக்குப் பயன்படுத்துவது 2) பொழுது கோக்கிற்காக பயன்படுத்துவது
3) சிகிச்சை முறையாக பயன்படுத்துவது 4) இசை விளக்கத்திற்கு பயன்படுத்துவது
5) நடனத்திற்குப் பதிலாகப் பயன்படுத்துவது

14. விவாத அரங்கு என்னும் Forum Theatre
1) பிறைக்ற் 2) பீற்றர் புறூக்ஸ் 3) மேயர் கோல்ட்
4) ரி.எஸ்.எலியட் 5) அகஸ்தாபோல், உடன் தொடர்பு படுவதாகும்

15. அமெரிக்காவில் நவீன நாடக வரலாற்றை தொடக்கி வைத்தவர் எனும் பெயரைப் பெறுவர்
1) யூயின் ஓநில் ஆவார் 2) ஆகர் மிரிலர் ஆவார் 3) ரெனிசி வில்லியம்ஸ் ஆவார்
4) இயனஸ்கோ ஆவார் 5) ஸ்ரைன் பேர்க் ஆவார்

16. அரங்கில் அளிக்கை முறைமையில் ஐரொப்பிய நாடக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் ரஷ்யக் கலைஞர்
1) அன்ரன் செக்கோவ் 2) புஸ்கின் 3) மேயர் கோல்ட்
4) மாக்சிம் கார்க்கி 5) ஸ்ரைன் பேர்க் ஆவார்

17. பீஜிங் ஒபேறா என்பது
1) சீனாவின் நவீன நாடக வடிவம் 2) சீனாவின் நவீன நாடக அரங்காகும்
3) சீனாவின் புராதன அரங்கக் கட்டடமாகும் 4) சீனாவின் புராதன இசை நாடக வடிவமாகும்
5) சீனாவின் புரதான நடன வடிவமாகும்

18. சீன நாடக வரலாற்றில் பிரசித்தி பெற்ற சிவப்பு விளக்கு என்பது
1) புரதான சீன மரபிற்குரியது
2) வணக்கத்திற்குரியது
3) சீன சடங்கு முறையைக் குறிப்பது
4) சீனப்புரட்சியை அடிப்படையாக கொண்டு எழுந்தது
5) சீனப்பாடல் அரங்கைக் குறிப்பது

19. யப்பானிய முக்கிய பாரம்பரிய நாடக மரபில் ஒன்றாகக் கருதக் கூடியது
1) கபுக்கி 2) புன்றகு 3) நோ 4) ஜென்றொகு 5) கியோயென்

20. நோ நாடக மரபில் "உபா (Uba) எனப்படும் வேட் முகம் குறிக்கும் பாத்திரம்
1) கிழவன் 2) கிழவி 3) போர்வீரன் 4) சூனியக்காரி 5) கன்னிப்பெண்

21. கதகளி என்பது
1) தமிழ் நாட்டிற்குரியது 2) கேரளத்திற்குரியது 3) மகாராஷ்டிராவுக்குரியது
4) உத்தரப் பிரதேசத்திற்குரியது 5) கர்ணாடகத்திற்குரியது

22. வங்காப் பிரதேசத்தின் பாரம்பரிய நாடகத்தின் பெயர்
1) யக்சகானம் 2) யாத்ரா 3) பாகவதமேளா 4) கூடியாட்டம் 5) நௌதாங்தி

23. ஏழு மலட்டு ராணிகளை பிரதான பாத்திரமாகக் கொண்ட சிங்களச் சடங்கு
1) சன்னியக்கும 2) ரட்டயக்கும 3) கோலம் 4) தொவில் 5) பகன்மடுவ

24. இலங்கையில் மலையகக் காமன் கூத்து இடம் பெறும் அரங்க வெளி
1) பொட்டல் வெளி ஆகும் 2) களத்துமேடு ஆகும் 3) பூங்குடிளி ஆகும்
4) வட்டக்களரி 5) படச்சட்ட அரங்கு

25. பெரும் பாலும் வைகாசி மாதத்தில் இடம் பெறும் நிகழ்வு
1) மானம்பூத் திருவிழா 2) கந்தசஷ்டி சூரன்போர்
3) பஞ்ச பாண்டவர் வனவாசச் சடங்கு 4) காமன் கூத்து
5) கண்ணகி அம்மன் குளுத்திச்சடங்கு

26. மானம்பூச் சடங்கில் இடம் பெறும் பிரதான பாத்திரங்கள்
1) சூரபத்மன், முருகன் 2) பஞ்சபாண்டவர், திரௌபதை அம்மன்
3) கஜமுகாசுரன், பிள்ளையார் 4) மஜிடாசுரன், மகிஷவர்த்தனி அம்மன்
5) கம்சன், கண்ணன்

27. சிங்கள நாட்டார் நாடகம் எனும் நூலின் ஆசிரியர்
1) நியூமான் ஜீபால் ஆவார் 2) இ.எவ்.சீ லுடோவைக் ஆவார்
3) ஜோன்.டி.சில்வா ஆவார் 4) எதிரிவீர சரச்சந்திர ஆவார் 5) சார்ள்ஸ் டயஸ் ஆவார்

28. இலங்கையில் தயாரிக்கப்பட்ட பழமையான „நாடகம்'
1) ஹரிச்சந்திர ஆகும் 2) அஹுலேபொல ஆகும் 3) பத்மாவதி ஆகும்
4) சிங்கபாகு ஆகும் 5) ஸ்ரீ விக்கிரமராஜசிங்க ஆகும்

29. மலையகப் பென்னர் சங்கர் நாடகத்தில் கதையை நகர்த்திச் செல்லும் பாத்திரம்
1) தாமரை பெரிய நாச்சி 2) பொன்னர் 3) குதிரைச் சேவகன்
4) மந்திர மாமுனி 5) பெரிய சாமி

30. பேராசிரியர் கணபதிப்பிள்ளையால் எழுதப்பெற்ற அரசியல் விமர்சன நாடகங்கள் இரண்டு
1) உடையார் மிடுக்கு, கண்ணன் கூத்து
2) முருகன் திருகுதாளம், நாட்டவன் நகர வாழ்க்கை
3) பொருளோ பொருள், சுந்தரம் எங்கே
4) சங்கிலி, மாணிக்க மாலை
5) தவறான எண்ணம், துரோகிகள்

31. பேராசிரியர் வித்தியானந்தன் தயாரிக்காத ஒரு கூத்து
1) வாலிவதை 2) கர்ணன் போர் 3) நொண்டி நாடகம்
4) இராஜ ணேசன் 5) அல்லி அர்ஜீனா

32. பின்வருவோரில் நாடகாசிரியர் அல்லாதவர்
1) ஸ்ரானீஸ்ல வங்கி ஆவார் 2) வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆவார்
3) எஹன்றிக் இப்சன் ஆவார் 4) அன்ரன் செக்கோவ் 5) சூத்ரகர் ஆவார்

33. பெடோல் பிர.ஃட் தனது வெண்கட்டி வட்டம் நாடகத்திற்கான கருவையும் உருவையும் பெற்றுக் கொண்டது.
1) சமஸ்கிருத நாடக மரபிலிருந்தாகும் 2) சீன நாடக மரபிலிருந்தாகும்
3) யப்பானிய நாடக மரபிலிருந்தாகும் 4) கொரிய நாடக மரபிலிருந்தாகும்
5) மலேசிய நாடக மரபிலிருந்தாகும்

34. நாடகத்திற்கான விளம்பரம் பிரதானமாக
1) நடிகரால் செய்யப்பட வேண்டும்
2) தயாரிப்பாளரால் செய்யப்பட வேண்டும்
3) நாடக ஆசிரியரால் செய்யப்பட வேண்டும்
4) நாடக நெறியாளரால் செய்யப்பட வேண்டும்
5) மேடை முகாமையாளரால் செய்யப்பட வேண்டும்

35. தொலைக்காட்சி நாடகத்தினைப் பற்றி
   1) அது அளிக்கும் காட்சியில் தங்கியுள்ளது
   2) ஒலிப்பதிவில் தங்கியுள்ளது
   3) வெளிப்புறக்காட்சிகளில் தங்கியுள்ளது
   4) அதன் வழி வரும் குரலில் தங்கியுள்ளது
   5) காட்சியையும், குரலையும் இணைப்பதில் தங்கியுள்ளது.

36. அரிஸ்ரோட்டில் வாழ்ந்த காலப்பகுதி
   1) கி.மு 4ம் நூற்றாண்டு   2) கி.மு 6ம் நூற்றாண்டு   3) கி.மு 8ம் நூற்றாண்டு
   4) கி.மு 10ம் நூற்றாண்டு   5) கி.மு 11ம் நூற்றாண்டு

37. "மொஸ்கோ" கலை அரங்கினை நிறுவியவர்
   1) ஸ்ரனிஸ்ல வங்கி   2) மேயர் கோல்ட்   3) பெடோல் பிரைக்ட்
   4) அரிஸ்ரோட்டல்   5) குறொட்ட வங்கி



அ



ஆ



இ

38. படம் (அ) இல் காணப்படுபவர்
   1) சூத்திரகர்   2) ஸ்ரீகர்சர்   3) பாசர்   4) காளிதாசர்   5) கதாஸ்கர்

39. படம் (ஆ) வில் காட்டப்பட்டுள்ள வேதாரி
   1) கபுக்கியில் வருவது   2) கதகளியில் வருவது   3) புன்றக்குக்குவில் வருவது
   4) நோ (Noh) வில் வருவது   5) கோலத்தில் வருவது

40. படம் (இ) வில் காணப்படும் நாடக ஆசிரியர்
   1) மேயர் ஹால்ட்   2) அகஸ்தா போல்   3) ஸ்ரானிஸ்ல வங்கி
   4) பெடோல் பிறைக்ஸ்   5) குறொட்ட வங்கி

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| நாடகமும் அரங்கியலும் | தரம் :- 13 (2017) | நேரம் :- |
|---|---|---|

## பகுதி II

அறிவுறுத்தல்கள்

❖ பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்க விடை எழுதுக.

## பகுதி II
## பிரிவு A

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

01.
1) நாடகம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
2) நாடகத்திற்கும் இலக்கியத்திற்குமிடையேயான உறுகளையும், வேறுபாடுகளையும் விளக்குக? (06 புள்ளிகள்)
3) நாடகம் சினிமாவிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது (07 புள்ளிகள்)

02.
1) கவிதையியல் எனும் நூலில் அரிஸ்ரோட்டில் முன்வைத்த அவலச்சுவை நாடகத்திற்குரிய ஆறு பண்புகளும் எவை? (03 புள்ளிகள்)
2) அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் கதாசிஸ் பற்றி விளக்குக? (06 புள்ளிகள்)
3) அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் மூன்றின் ஒருங்கியல்புகள் யாவை? அவை நாடகமொன்றில் எவ்வாறு அமைகின்றன என அவர் கூறுவதை விளக்குக? (06 புள்ளிகள்)

03. ஆற்றுவோர் தமக்கும் பார்ப்போருக்கும் வசதியான ஓர் அரங்க வெளியிலே ஆற்றுகை செய்கின்றனர். பின்வரும் அரங்க வெளிகளின் இயல்புகளை அமைப்பு நிலையிலும் ஆற்றுகை நிலையிலும் விளக்குக.
1) வட்டக்களரி அரங்கு
2) மலையக அர்ச்சுனன் தபசு அரங்கு
3) கிரேக்க அரங்கு

## பிரிவு B

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)

04.
1) இந்திய சமஸ்கிருத அரங்கில் பேசப்படும் பத்து வகையான நாடக மரபுகளை விளக்குக? (07 புள்ளிகள்)
2) நடிப்பின் போது நான்கு வகையான அபிநயங்களும் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை விளக்குக? (08 புள்ளிகள்)

05. ‘‘அரங்கக் கோட்பாடுகளும் காலத்தின் தேவை கருதி புதியனவாகத் தோற்றம் பெறுகின்றன.
1) பேட்டோல்ற் பிறை.்.ட்டின் காவியங்கள் நடிப்புக் கோட்பாட்டை விளக்குக. (07 புள்ளிகள்)
2) அகஸ்தாப்போல் முன்வைத்த அரங்கக் கோட்பாடு யாது? இது ஐரோப்பிய அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை? (08 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக
1) சீன பீஜிங் ஒபேரா
2) சிங்கள ரட்டயக்கும்
3) பலே ஆட்டம்
4) டித்திராம்
5) பூர்வரங்க

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

**தவணைப் பரீட்சை, யூன்- 2017**

# Term Examination, June - 2017

| நாடகமும் அரங்கியலும் - II | தரம் :- 13 (2017) | நேரம் :- 3 மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1. யூலியசீசரை கொலை செய்தவர்களுக்கு எதிராகத் தூண்டிய பிரசித்தமான பேச்சினைப் பேசிய நாடகப் பாத்திரம்
   1) புறூட்டல் 2) காசியஸ் 3) கயஸ்கா 4) மார்க் அன்ரனி 5) ஒக்டேவிய சீசர்

2. அன்ரிக்கனி நாடகத்தில் வரும் தைரீசியஸ் என்னும் பாத்திரம் ஒரு
   1) காவலாளி 2) போர்வீரன் 3) செய்தியாளன் 4) தூதன் 5) தீர்க்கதரிசி

3. “ஒத்தல்லோ நாடகத்தில் காணப்படாத அம்சங்கள்
   1) காதல், நம்பிக்கை 2) உன்னத காமம், துரோகம் 3) பொறாமை, தூய அன்பு
   4) வருவதுரைத்தல், ஊழவினை 5) சந்தேக, சதித்திட்டம்

4. யூலியஸ்சீசர் நாடகக்கதையின் படி சீசரின் மறைவிற்குப் பின் ஆட்சியதிகாரத்தில் இருந்தவர்கள் யாவர்
   1) புறூட்டஸ், லெப்பிடஸ், கயஸ்கா
   2) கயஸ்கா, சீனா, காசியஸ்
   3) ஒக்ரேவியசீசர், லெப்பிடஸ், மார்க் அன்ரனி
   4) மார்க்க அன்ரனி, புறூட்டஸ், பகார்னியா
   5) ஒக்ரேவியசீசர், கயஸ்கா, புறூட்டஸ்

5. ஜப்பானிய பாவை அரங்கின் பெயர்
   1) புன்ரகு 2) கபுகி 3) கோவாக்கா 4) கியோஜன் 5) நோ

6. “அலங்காரரூபன்” நாடகத்தினூடாகக் கூறப்படும் கருத்து அல்லாதது
   1) துன்பத்திலிருந்து மீள மீண்டும் மீண்டும் துன்பம் வரும்
   2) இறை நம்பிக்கையும், பக்தியும் மனிதனுக்கு அவசியமானது
   3) மனிதத்துவத்தை மதிப்பதற்கான மனப்பக்குவம் வேண்டும்
   4) ஆராயாது செய்யும் போர் அழிவைத் தரும்
   5) தெய்வத்தால் நிச்சயம் பெற்ற திருமணம் நிறைவேறும்

7. திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் “குறம்” என்பது
   1) சிங்கன் சிங்கிமேல் காதல் கொள்வதை குறிக்கும்
   2) குற்றாலநாதரை வசந்தவல்லி காதல் கொள்வதை குறிக்கும்
   3) பரமாத்மா ஜீவாத்மாவும் சங்கமிப்பதை குறிக்கும்
   4) குறத்தி குறி சொல்லும் பகுதியின் மையப் பகுதியை குறிக்கும்
   5) குறத்தியைக் கண்டு குறவன் வியந்து பேசும் இறுதிப்பகுதியைக் குறிக்கும்.

8. மகாகவி காளிதாசரின் “அபிக்ஞான சாகுந்தலம்” நாடகத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் அல்லாதவர்
   1) சுத்தானந்த பாரதி 2) மறைமலை அடிகள் 3) சோ. நடராசன்
   4) இ.முருகையன் 5) சந்தானம்

9. அதிக அளவிலான காதல் சுவையினைக் கொண்டிருக்கும் வடிவம்
1) வடமோடி 2) வடபாங்கு 3) தென்மோடி 4) தென்பாங்கு 5) வாசாப்பு

10. ஆடும் போது நடிகன் பாடாத அரங்கு
1) பார்சி 2) கதகளி 3) வடமொடி 4) தெருகூத்து 5) காமன் கூத்து

11. நடிகனது நடிப்பு வெளிப்படுவதற்கு உதவுவது
1) விருத்தி 2) ரஸம் 3) ஆதிகாரிகம் 4) அபிநயம் 5) பிரசாங்கிகம்

12. ஈழத்து நாடக ஆசிரியர் பிரான்சிஸ் ஜெனம் காலமான ஆண்டு
1) 2014 2) 2016 3) 2017 4) 2012 5) 2015

13. எலிசபெத்கால அரங்கில் தனிமொழி நிகழ்த்தப்படுவதற்கு பயன்படுத்தப்படும் பகுதி எது
1) மேல் மேடை 2) பின்மேடை 3) முன் துருத்திய மேடை
4) களரி 5) இசைஞர் கலரி

14. கிரேக்கத்தில் நாடகங்களை தயாரிப்பதற்கு பொறுப்பானவராகக் காணப்பட்டவர் யார்
1) நெறியாளர் 2) நாடக ஆசிரியர் 3) தயாரிப்பாளர் 4) கோறஸ் 5) நடிகர்

15. மத்திய காலத்தில் இருண்ட காலமாகக் கருதப்படும் காலப்பகுதிய யாது?
1) கி.பி 3 – 6 வரை 2) கி.மு 6 – 9 வரை 3) கி.பி 6 – 9 வரை
4) கி.பி 9 – 12 வரை 5) கி.மு 1 – 3 வரை

16. யப்பானிய பாவை அரங்கினை செம்மைப்படுத்தியவர்
1) புன்றாக்கு சென் 2) கனாமி மோட்டோக்கியோ 3) சிக்கமடசு
4) சியாமி மோட்டோக்கியோ 5) மீலான்ங் பாங்

17. யப்பானிய நோ நாடகங்களின் வகைகளில் அடங்காதது
1) சென்சாய் மொனோ 2) அசுர பெண் 3) வக்கி 4) கிரி 5) நடிகர்

18. கனாமிச்சி என்றால் என்ன
1) நோ அரங்கின் பாலப்பாதை
2) கபுக்கி அரங்கின் பாலப்பாதை
3) கபுக்கி அரங்கில் பெண் வேடம் ஏற்பவர்கள்
4) நோ அரங்கில் பெண் வேடம் ஏற்பவர்கள்
5) கபுக்கி அரங்கில் செய்யப்படும் ஒரு வகை ஒப்பனை

19. குழந்தை ம. சண்முகலிங்கம் தோற்றுவித்த அரங்க நிறுவனம்
1) லங்கா சுபோத விலாசசபை 2) நாடக அரங்கக் கல்லூரி 3) நடிகர் ஒன்றியம்
4) சுகுண விலாசபை 5) சரஸ்வதி சபா

20. 1933 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில நாடகக் கழகத்தை ஸ்தாபித்தவர்
1) திஸ்ஸ காரிய வசம் 2) எதிரிவீர சரச்சந்திர 3) இ.எவ்.சி.லுடோவைக்
4) ஏரனஸ்ற் மக்கின் டயர் 5) ரத்னபால தசில்வா

21. பின்வருவனவற்றுள் சிங்கள நாடக ஆசிரியர் திஸ்ஸ காரியவசம் அவர்களால் எழுதப்பட்ட நூல்
1) சிங்கள நாடக வரலாறுங 2) சிங்கள நாட்டார் நாடகம் 3) சிங்கள நாடக வளர்ச்சி
4) சிங்கள பாரம்பரிய அரங்கு 5) சிங்கள நாடகத்தின் கதை

22. தலைசிறந்த "பா" நாடக ஆசிரியர் அம்பியின் சிறந்த நாடகங்களில் ஒன்று
1) புதியதொரு வீடு 2) விடிவை நோக்கி 3) கடூழியம்
4) முற்றிற்று 5) வேதாளம் சொன்ன கதை

23. வேத்தியல், பொதுவியல் என்பன பற்றி எடுத்துரைக்கும் நூல்
1) தொல்காப்பியம் 2) கலித்தொகை 3) பரிபாடல்
4) சிலப்பதிகாரம் 5) மணிமேகலை

e-thaksalawa The National e-learning Portal for the General Education

24. தமிழ் நாட்டில் தெருக்கூத்து பெருவாரியாக ஆடப்படும் மாவட்டம்
1) செங்கல்பட்டு 2) திருச்சி 3) மதுரை 4) சேலம் 5) கோயம்புத்தூர்

25. மகேந்திர பல்லவனால் எழுதப்பட்ட மத்தவிலாசப் பிரகசனம் என்பது ஒரு
1) அவலச்சுவை நாடகம் 2) அங்கதச்சுவை நாடகம் 3) காதற்சுவை நாடகம்
4) காமச்சுவை நாடகம் 5) மகிழ் நெறிச்சுவை நாடகம்

26. கோபாலகிருஷ்ண பாரதியார் எழுதியது
1) இராம நாடகக் கீர்த்தனை ஆகும் 2) நந்தனார் - சரித்திரக் கீர்த்தனை ஆகும்
3) பத்மாவதி சரித்திரம் ஆகும் 4) கோவலன் சரித்திரம் ஆகும்
5) பஞ்சபாண்டவர் சரித்திரம் ஆகும்

27. தமிழ் நாட்டு நாடக வரலாற்றில் கும்பகோணத்தில் அழகிய இளம் பெண்களைக் கொண்டு நாடகம் நடத்தியவர்
1) பாலாமணி அம்மையார் 2) சங்கரதாஸ் சுவாமிகள் 3) பால சரஸ்வதி
4) கே.குற்றாலம்பிள்ளை 5) கே.பி.சுந்தராம்பாள்

28. சமஸ்கிருத அரங்கப்பகுதிகளில் ஒன்றாக "நேபத்ய கிருகம்" குறிப்பது
1) பிரதான மேடையாகும் 2) பார்ப்போர் கூடத்தையாகும் 3) ஒப்பனை அறையையாகும்
4) பிரதான வாயிலையாகும் 5) திரையையாகும்

29. சைக்குளோராமா எனப்படும் ஒளியமைப்பு மேடையில் அமைக்கப்படுவது
1) முன் பகுதியில் 2) இடப்பகுதியில் 3) வலப்பகுதியில்
4) பின் பக்கத்தில் 5) விதானத்தில்

30. ஒளி விதானிப்பின் போது குறிப்பாகப் பாத்திரத்தைச் சுட்டும் ஒளி விளக்கு
1) பொட்டொளி 2) கீற்றொளி 3) விரிகைச் சக்கரம்
4) பெருக்கொளி 5) மங்கலாக்கி

31. யதார்த்த நாடகத்தின் வேட உடைகள் வேடப்புனைவு பெரும்பாலும்
1) குறியீட்டுப் பண்புகள் கொண்டதாக இருக்கும்
2) பகட்டு, ஆடம்பரமானதாக இருக்கும்
3) வாழ்க்கையை ஒத்தனவாகக் காணப்படும்
4) பாத்திரங்கள் யாவும் ஒரே மாதிரியாகக் காணப்படும்
5) முத்துக்கள் மணிகள் பதித்த ஆடையாக காணப்படும்

32. பின்வருவனவற்றுள் வேடமுகத்தின் பயன்பாடு எனக் கருத முடியாதது
1) பாத்திரத்தின் இயல்பைக் காட்டுதல்
2) ஒரு நடிகர் பல பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல்
3) பலர் ஒரு பாத்திரத்தை ஏற்றுக் கொள்ளல்
4) மனிதரல்லாத பாத்திரங்களை ஏற்றுக் கொள்ளல்
5) உணர்ச்சிகளை மாறிமாறிக் காட்டுதல்

33. கூத்தில் திரை பிடித்தல் எச்சந்தர்ப்பத்தில் பயன்படுகிறது
1) பாத்திரம் வெளியேறுகையின் போது 2) பாத்திர அறிமுகத்தின் போது
3) வரவுப்பாடல் பாடப்படும் போது 4) வாழி பாடும் போது 5) காப்புப்பாடலின் போது

34. இளவேனிற் காலத்தில் நிகழ்த்தப்படும் மலையகக் கூத்து
1) காமன் கூத்து 2) பொன்னர் சங்கர் 3) அருச்சுனன் தபசு
4) கோவலன் கூத்து 5) மகிடிக் கூத்து

35. எடுத்துரைப்பு பாங்கில் நிகழ்த்தப்படும் நாடகவடிவம்
1) பார்சி 2) கூத்து 3) தெருவெளி அரங்கு
4) சொல்லாடல் அரங்கு 5) காவிய அரங்கு

36. பெண்களின் ஆற்றுகையினை தனியே கொண்டு நிகழ்த்தப்பட்ட அரங்கு
1) பல்லவர் கால அரங்கு 2) சோழர் காலஅரங்கு 3) நாயக்கர் கால அரங்கு
4) பாண்டியர் கால அரங்கு 5) சிலப்பதிகார கால அரங்கு

❖ **37 – 40 வரையான வினாக்களுக்கு பின்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை அளிக்குக.**



அ



ஆ



இ



ஈ

37. படம் (அ) இல் காட்டப்பட்டுள்ள காட்சி இடம் பெற்ற யதார்த்த நாடகம்
1) ஒரு பாவையின் வீடு 2) அபசுரம் 3) அன்ரிக்கனி 4) ஒதல்லோ 5) சாகுந்தலம்

38. படம் (ஆ) வில் காணப்படும் இசைக்கருவி
1) தபேலா 2) ஆபிரிக்க டிரம் 3) கொரியன் டிரம் 4) மிருதங்கம் 5) உடுக்கு

39. படம் (இ) இல் காட்டப்பட்டுள்ள நாடகத்துறைக்கு பெரும் பங்காற்றியவர் யார்
1) பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை 2) பேராசிரியர் சு.வித்தியானந்தன்
3) பேராசிரியர் கா.சிவத்தம்பி 4) பேராசிரியர் குழந்தை ம.சண்முகலிங்கம்
5) கலையரசு க.சொர்ணலிங்கம்

40. படம் (ஈ) வில் காணப்படும் வேட முகம்
1) நோ வேடமுகம் 2) கபுக்கி வேடமும் 3) கிரேக்க மகிழ் நெறி வேடமுகம்
4) அவலச்சுவை வேடமுகம் 5) அழுக்குச்சன்னி வேடமுகம்

The National e-learning Portal for The General Education

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| நாடகமும் அரங்கியலும் | தரம் :- 13 (2017) | நேரம் :- |
|---|---|---|

## பகுதி II

❖ பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

01.
1) அன்ரிக்கனி நாடகத்தில் அன்ரிக்கனி பாத்திரத்தின் இரண்டு செயல்களைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

2) அன்ரிக்கனியின் செயல்கள் காட்டும் அன்ரிக்கனியின் குணாம்சங்களை எழுதுக? (05 புள்ளிகள்)

3) அன்ரிக்கனி நாடகத்தில் வரும் கிரயன் என்னும் பாத்திரத்தின் குண இயல்புகளை உதாரணங்களுடன் விளக்குக. (07 புள்ளிகள்)

02.
1) யதார்த்த வாதம் என்றால் என்ன என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)
2) இப்சனின பொம்மை வீடு நாடகத்தை யதார்த்த நாடகமாகக் கொள்ளலாமா? காரணங்களை முன்வைத்து விடையை விளக்குக (10 புள்ளிகள்)

03.
1) யூலியர் சீசர் நாடகம் ஒரு வரலாற்றுக் கதையினைக் கொண்டிருக்கின்ற போதும் அது எவ்வகையில் அவலச்சுவை நாடகம் என்பதை சுருக்கமாக விளக்குக? (04 புள்ளிகள்)

2) சீசரின் பாத்திரப்பண்பு எவ்வகையில் வளர்த்துச் செல்லப்படுகின்றது? (05 புள்ளிகள்)

3) புரூட்டஸ், மார்க் அன்ரனி, ஆகிய பாத்திரங்களின் இயல்புகளை சுருக்கமாக தருக? (05 புள்ளிகள்)

## பகுதி B

04.
1) இலங்கைத் தமிழ் அரங்கில் பாரம்பரியமாகக் கூத்து பயிலப்படும் பிரதேசங்களைக் குறிப்பிட்டு அப்பிரதேசங்களில் பயிலப்படும் கூத்துக்களைப் பட்டியற்படுத்துக? (05 புள்ளிகள்)

2) அவற்றினுள் மலையகக் கூத்துக்கள் பற்றி விரிவான விளக்கம் தருக. (05 புள்ளிகள்)

3) பாரம்பரிய கூத்துக்களைப் பேணிப்பாதுகாத்தல் தொடர்பான உமது கருத்துக்களை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

05. இலங்கைத் தமிழ் அரங்க வளர்ச்சியில் பின்வருவோரின் பங்களிப்புக்களை விளக்குக.
1) குழந்தை ம. சண்முகலிங்கம் (05 புள்ளிகள்)
2) கலையரசு சொர்ணலிங்கம் (05 புள்ளிகள்)
3) பேராசிரியர் கணபதிப்பிள்ளை (05 புள்ளிகள்)

06. பின்வரும் சிங்கள அரங்குகளின் ஏதேனும் மூன்றின் ஆற்றுகை முறைமைகளை விளக்குக
1) சொக்கரி
2) கோலம்
3) கன்னியக்கும்
4) தொவில்
5) கொகம்ப ஹங்காரிய